சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **242 /2016**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி..A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2026**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சிவசுப்ரமணியன் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) குளித்தலை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்று நகல் - எ.ம.சா.ஆ.1.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் நான் கோயம்புத்தூரில் இருந்து திருச்சி நோக்கி பேருந்தை ஓட்டி வந்தேன். மேற்படி கோயம்புத்தூரில் மாலை 4.30 மணியளவில் பேருந்தை எடுத்து திருச்சிக்கு இரவு 8.55 மணியளவில் வந்து சேர்ந்தேன். நான் மேற்படி பேருந்தினை உரிய நேரத்திற்கு வரவேண்டும் என்பதற்காக வேகமாக ஓட்டி வந்தேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் என்மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி வழக்கானது விடுதலைஆகிவிட்டது. மேற்படி விபத்து சம்மந்தமாக எங்களது நிறுவனத்தினர் என்மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொண்டார்களா என்றால் முதலில் எடுத்தார்கள், பின்னர் மேற்படி குற்ற வழக்கு விடுதலை ஆனவுடன் நடைவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேற்படி விபத்திற்கு நான் காரணம் என்றாலும், எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது சாலையின் மையபகுதியில்

நடைபெற்றது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணமானது இந்நீதிமன்ற உத்தரவை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:57:43 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.